வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 30.04.2026 வியாழக்கிழமை இதழ் : 114 பக்கங்கள் : 08







# ஈழத்தமிழர் அரசமைப்பு நிர்ணய குழு ஒற்றுமை முயற்சியை பலப்படுத்தும்!

## ஏனைய கட்சிகளுக்கு கஜேந்திரகுமார் எம்.பி.அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல். 30


**"ஈழத்தமிழர் அரசமைப்பு நிர்ணயப் பொதுச்சபை வழி நடத்தல் குழு வின் செயற்பாடானது, தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை முன்னெடுத்து வரும் 'ஒற்றுமை முயற்சியை மேலும் பலப்படுத்துவதாகவே அமையும்" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

அரசியல் தீர்வு குறித்த ஆவணத்தைத் தயாரிப்பதற்காக 28 பேர் அடங்கிய புதிய குழு நியமிக்கப்பட்டமை தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வெளியிட்ட விசனம் குறித்து விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் கூறுகையில்-

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் இணைந்து, புதிய அரசமைப்பில்

07



# குற்றவியல் வழக்குள்ள அர்ச்சுனா எம்.பிக்கு துப்பாக்கி அனுமதி எப்படி வழங்கப்பட்டது?

## சட்டத்தரணி மணிவண்ணன் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 30

குற்றவியல் வழக்குகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ள ஒருவருக்கு கைத்துப்பாக்கி வைத்திருக்க அனுமதி வழங்க முடியாது என சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கைத்துப்பாக்கி காட்டி மிரட்டிய சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணையில், அர்ச்சுனா இராமநாதனுடன் முரண்பட்ட தரப்பினர் சார்பில் சட்டத்தரணி மணிவண்ணன் மன்றில் முன்னிலையாகி இருந்தார்.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் , ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக பல்வேறு குற்றவியல் வழக்கு விசாரணைகள் நீதிமன்றங்களில் நடைபெற்று வருவதனால், அவர் கைத்துப்பாக்கி வைத்திருப்பதற்கான அனுமதியை வழங்கி இருக்கமுடியாது.

இவர் தன்னிடம் துப்பாக்கி இருப்பதாகக் கூறி இதற்கு முன்னரும் பல்வேறு இடங்களில் மிரட்டியும் இருக்கிறார்.

07

# செம்மணி மனித புதைகுழியில் நேற்று ஒரு என்பு கூட்டுத்தொகுதி அடையாளம்



யாழ்ப்பாணம், ஏப். 30

செம்மணி புதைகுழி அகழ்வுப் பணிகளின்போது, என்பு கூட்டுத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அதனை சுத்தம் செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சட்டத்தரணி

07

# கேப்பாபிலவு பிரதேச மக்கள் மே தினத்தன்று ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, ஏப். 30

முல்லைத்தீவு கேப்பாபிலவு இராணுவ முகாமின் பிரதான வாயிலுக்கு முன்பாக, எதிர்வரும் முதலாம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாகவும், அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்கவேண்டும் எனவும் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு காணி விடுவிப்பு தொடர்பில், கேப்பாபிலவு மக்கள் நினைவூட்டல் கடிதம் ஒன்றை நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் கையளித்தனர்.

அதன் பின்னர் எதிர்வரும் முதலாம் திகதி

07

# பல பகுதிகளில் இன்று அதிக வெப்ப நிலை

கொழும்பு, ஏப். 30

இன்று பல பகுதிகளில் பகல் வேளையில் வெப்பச் சுட்டெண், மனித உடலுக்கு உணரப்படும் வெப்பமானது "கவனம் செலுத்த வேண்டிய" மட்டத்தில் காணப்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் குருநாகல், மொனராகலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் இவ்வாறான வெப்பமான காலநிலை நிலவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டல வியல் திணைக்களத்தின் இயற்கை அனர்த்தங்கள் குறித்த

07

2.5 மில்லியன் டொலர் விவகாரம்

# அரச நிதி பற்றிய குழுவில் முன்னிலையாக முடியாது!

## திறைசேரி செயலாளர் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 30

அரச நிதிப்பற்றியக் குழுவில் இன்று முன்னிலையாக முடியாதென திறைசேரியின் செயலாளர் ஹர்சன சூரியப்பெரும கடிதம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

அது தொடர்பான கடிதம் அரச நிதி பற்றிய குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் தலைவர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

07

# மன்னார் மாவட்ட குள புனரமைப்பு மோசடி; அறிக்கை பொது பாதுகாப்பு அமைச்சருக்கு!

## சி.ஐ.டியில் முறைப்பாடு செய்வதற்கு ஏதுவாக

மன்னார், ஏப். 30

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களில் குளப் புனரமைப்புப் பணிகளின் போது இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறையிடுவதற்கு ஏதுவாக பொது மக்கள் பாதுகாப்பு கௌரவ அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை

07

# அர்ச்சுனா எம்.பிக்கு பிணை

யாழ்ப்பாணம், ஏப். 30

கைத்துப்பாக்கி காட்டி மிரட்டிய குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்துள்ளது.

அதேவேளை அர்ச்சுனா இராமநாதன் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெண்ணையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

பெரியவிளான் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினருக்கும், மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் காணி

07

# திறைசேரி அதிகாரிகளுக்கு பிரதி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 30

திறைசேரியிலிருந்து காணாமல் போனதாகக் கூறப்ப டும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்க த்தால் மீட்க முடியாவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த தொகையைச் செலுத்த நேரிடும் என்று சுற்றுலா பிரதி

07



# திறைசேரிச் செயலாளரின் நிலைப்பாடு ஏற்கமுடியாதது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 30

அரச திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் காணாமல் போனமை தொடர்பான விவகாரத்தை ஆராய இன்று கூடவுள்ள அரச நிதி பற்றிய குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது என அந்தக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பணப்பரிமாற்றத்தில் குளறுபடி;

# வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இரட்டைக் கொடுப்பனவு அம்பலம்!

கொழும்பு, ஏப். 30

வீதி அபிவிருத்தி அதிகாரச பையின் ஒப்பந்தக்காரர்களுக்கு இருமுறை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளது.

இத்தவறுதலான பணப்பரி மாற்றங்களை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை வங்கி முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, வங்கிப் பணப்பரிமாற்றக் கோப்பில் ஏற்பட்ட பிழை காரணமாகவே இந்தப் பணம் இருமுறை பரிமாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இத்தவறுதலால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குகளுக்கோ அல்லது தனிப்பட்ட கணக்குகளுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை. வங்கிகளிடம் இவ்வாறான தவறுகளைச் சரி செய்யவும், பணத்தை மீளப் பெறவும் முறையான கட்டமைப்பு உள்ளது அதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்னதாக வெளியிட்டிருந்த அறிக்கையில், ஒப்பந்தக்காரர்களுக்கு இவ்வாறான "இரட்டைப் கொடுப்பனவுகள்" எதுவும் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தது.

தமது நிதிப் பதிவுகளின்படி எவ்வித மேலதிகப் பரிமாற்றங்களும் இடம்பெறவில்லை என்றும், நிறுவனத்துக்கு நிதி இழப்பு ஏற்படவில்லை என்றும் அதிகார சபை தெரிவித்திருந்தது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது "எக்ஸ்" தளத்தில் பதிவொன்றை பதிவிட்டிருந்தார்.

அதில், முறைமை பிழை காரணமாக 263 மில்லியன் ரூபாய் ஒப்பந்தக்காரர்களுக்குத் தவறாக அனுப்பப்பட்டதை இலங்கை வங்கியின் "நிதி மீட்பு" அறிவிப்பு உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வங்கியின் கூற்றை மேற்கோள் காட்டியுள்ள அவர், வழங்கப்பட்ட தொகையில் இன்னும் 51 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகை மீட்கப்படாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மறுப்புத் தெரிவித்திருந்த பின்னணியில், அரசாங்கம் தற்போது இத்தவறை ஏற்றுக்கொண்டுள்ளமை அரசியல் ரீதியாகவும் பேசும்பொருளாக மாறியுள்ளது.

# தொலைபேசியில் தொடர்ச்சியாக தொல்லை கொடுத்தால் அபராதம்

கொழும்பு, ஏப். 30

டிஜிற்றல் தளங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் ஊடாக பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், சட்ட நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க தொலைத்தொடர்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ், இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க முடியும் என கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் வழக்குச் செயல்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி, சட்டத்தரணி திலன் குமார சுட்டிக்காட்டியுள்ளார்.

நியாயமான காரணமின்றி, ஒருவரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் நோக்கில் மீண்டும் மீண்டும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வது அல்லது குறுஞ்செய்திகளை அனுப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஒருவரது தொலைபேசி இலக்கத்தை அவரது அனுமதியின்றி சமூக வலைத்தளங்களிலோ அல்லது பொது வெளியிலோ பகிர்ந்து, அவர்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதும் இச்சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும்.

இக்குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவருக்கு,100,000ய ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

அத்துடன், குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இணைப்பைத் துண்டிப்பதற்கான அதிகாரமும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொலைபேசி அழைப்புகள் அல்லது செய்திகள் ஊடாக இவ்வாறான தொல்லைகளுக்கு உள்ளாகும் நபர்கள், அது தொடர்பான ஆதாரங்களுடன் அருகில் உள்ள காவல்துறை நிலையத்திலோ அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலோ முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி புதிய பீடாதிபதிக்கான வரவேற்பு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாக பணிப் பொறுப்பேற்றிருக்கும் அருணாசலம் குகனை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சார்பில் வரவேற்கும் நிகழ்வு நேற்று புதன் காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலாசாலையின் பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் கௌரவிப்பு உரை ஆற்றினார்.

கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (அ)

## ஷானி, ரவியின் மனு; தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 30

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாகத் தாங்கள் சட்டவிரோதமாக கைது செய்யப்படுவதைத் தடுக்கும்படி கோரி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ரவி செனவிரத்ன ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணையை நிறைவு செய்த உயர் நீதிமன்றம், தனது தீர்ப்புக்கான திகதியை நிர்ணயிக்காமல் ஒத்திவைத்துள்ளது.

இந்த அடிப்படை உரிமை மனுக்கள், பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சுரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் கிஹான் குலதுங்க ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள்கொண்ட உயர் நீதிமன்ற அமர்வின் முன்பாக நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா, இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துவிட்டதாகவும் இதுவரை எந்தச் சந்தேக நபர்களும் அடையாளம் காணப்படவில்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பான சமர்ப்பணங்கள் நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும உள்ளிட்ட சட்டத்தரணிகள் வாதங்களை முன்வைத்தனர்.

இரு தரப்பு சட்டத்தரணிகளும் முன்வைத்த வாய்மொழி வாதங்களை நிறைவு செய்த அமர்வு, இவ்வழக்குகள் தொடர்பான எழுத்துமூர்வ வாதங்களை நேற்றிலிருந்து மூன்று வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு இரு தரப்பு சட்டத்தரணிகளுக்கும் உத்தரவிட்டது.

மேலும், இவ்வழக்கின் தீர்ப்பு அறிவிப்பு ஒத்திவைக்கப்படும் என்றும் அந்த அமர்வு தெரிவித்தது. (அ)

## அஸ்வெசும நலன்புரி பயனாளிகளை துல்லியமாக இனங்காண நடவடிக்கை

கொழும்பு, ஏப். 30

அஸ்வெசும நலன்புரிப் பயனாளிகளைத் துல்லியமாக இனங்காண்பதற்கும், பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும் பணிகளை அதிக வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் நிதி அமைச்சில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது தற்போது நடைமுறையிலுள்ள பயனாளிகளை இனங்காணும் முறையிலுள்ள அளவுகோல்களைத் திருத்தியமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும், பணிகளை விரைவுபடுத்தவும், வெளிப்படைத்தன்மையைப் பேணவும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகுதியான பயனாளிகளைத் துல்லியமாக இனங்காண்பது குறித்து விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது போன்ற நீண்டகால நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, தற்போதைய பிரச்னைகளுக்குக் குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுகளை இனங்காண்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

குறித்த திட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல், கிராம உத்தியோகத்தர்களை முழுமையாகச் செயலில் ஈடுபடுத்துதல் மற்றும் கொடுப்பனவு முறையிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (அ)

## கோதுமை மா விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 30

கோதுமை மா ஒரு கிலோகிராமின் விலையை நேற்று முதல் 5 ரூபாவினால் அதிகரிப்பதற்கு ப்ரீமா நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய 220 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் புதிய விலை 225 ரூபாவாகும். (அ)

## 3 பீடங்களின் மகா சங்கத்துடன் ஜனாதிபதி அநுர விசேட சந்திப்பு

கொழும்பு, ஏப். 30

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருட்களுடன் பிக்குகள் சிலர் கைது செய்யப்பட்டமை மற்றும் அது தொடர்பான விசாரணைகள், அதனால் எழுந்துள்ள நிலைமைகள் குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன் மூன்று பீடங்களின் மகா சங்கத்தினரின் தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போது போதைப்பொருள் அச்சுறுத்தல் ஒரு தேசிய பேரழிவாக மாறியுள்ளதை இந்தச் சம்பவம் உறுதிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, போதைப்பொருளுக்கு எதிராக அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்துடன் அனைவரும் வலுவாக கைகோர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முழுச் சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மற்றும் தற்போதைய நிலைமை குறித்து பொலிஸ் மா அதிபர் இதன்போது விளக்கமளித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மகாநாயக்க தேரர்கள் ஏற்கனவே ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், அதனை முழு பிக்கு சமூகத்தின் செய்தியாகக் கருதிச் செயற்படுமாறு மகா சங்கத்தினர் அரசாங்கத்திடமும் பொதுமக்களிடமும் கோரிக்கை விடுத்தனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
30.04.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

## ஆலோகாவின் முற்பிறப்பு

இலங்கையில் அமைதி நடைப்பயணத்தை முடித்துக்கொண்ட வியட்நாமிய அமெரிக்க பிக்குகள் குழுவின் செல்லப் பிராணியான ஆலோகா பற்றி சுவாரஸ்யமான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஈழநாடு இன்றைய தினமும் அந்த “அமைதி நாய்” பற்றி கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறது.

பிக்குகளும் ஆலோகாவும் அமெரிக்காவில் 2300 மைல்கள் நடைப் பயணத்தை ஏற்கெனவே மேற்கொண்ட போதிலும், இலங்கையில் அவர்களுக்கு கிடைத்ததைப் போன்ற அரசாங்க மற்றும் ஊடக ஆதரவு அங்கு கிடைக்கவில்லை என்று இப்போது கூறப்படுகிறது.

அமைதி நடைப்பயணம் இலங்கையில் ஒரு சமாதானக் கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் முயற்சியாக விரிவடைவதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பதாகக் கூறும் தென்னிலங்கையைச் சேர்ந்த குடிமைச் சமூக (Civil Society) முக்கியஸ்தர்கள் சிலர் நாடு நீண்டகால மோதல்களைக் கடந்து நிலையான நல்லிணக்கத்தை நோக்கியும் இன, மத பிளவுகளுக்கு அரசியல் தீர்வை நோக்கியும் நகர வேண்டுமானால், அத்தகைய கலாசாரம் அவசியம் என்றும் நடைப் பயணத்துக்கு அரசாங்கம் வழங்கிய முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் அத்தகைய கலாசாரத்தை உருவாக்குவதற்கான ஒரு பரந்த முயற்சியின் பகுதியாக நோக்க முடியும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால், அத்தகைய கலாசாரத்தை உருவாக்குவதில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை இருந்திருக்குமானால், ஆலோகா சகிதம் பிக்குமாரின் அமைதி நடைப்பயணம் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கும் செல்வதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு அரசாங்கம் செய்யவில்லை.


போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குத் தான் நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டுச் செய்தி கொண்டு செல்லப்பட வேண்டும். அமெரிக்காவில் இருந்து வந்த பிக்குகளுக்கு இலங்கை மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு முகங்கொடுத்தது என்பதும் வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே பாரிய அழிவுகள் ஏற்பட்டதுடன் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதும் தெரியாமல் இருந்திருக்க நியாயமில்லையே.

இது இவ்வாறிருக்க, அமைதி நடைப் பயணத்துக்கு தலைமை தாங்கிய வியட்நாமிய பிக்குவான வண. திக் பன்னகார தேரர் தங்களது செல்லப் பிராணியான ஆலோகா முற்பிறப்பில் ஒரு பௌத்த பிக்குவாக இருந்திருக்க வேண்டும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

களனி ரஜமகா விகாரரையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை சமயப் பிரசங்கம் செய்த தேரர் முற்பிறப்பில் அந்த பிக்கு ஒழுக்கக் கட்டுப்பாடு கொண்ட நடத்தைகள் காரணமாகவே மீண்டும் ஆன்மீகப் பயணத்தைத் தொடருவதற்காக நாயாக பிறப்பெடுத்திருக்கிறார் என்றும் அதன் காரணத்தினாலேயே தான் அதற்கு ஆலோகா (ஒளி அல்லது ஞானம்) என்று பெயர் சூட்டியதாகவும் குறிப்பிட்டார்.

பன்னகார தேரருடைய இந்த கருத்துக்களை நோக்கும்போது இந்த பிறப்பில் பிக்குமாராக இருந்துகொண்டு புத்தபெருமானின் போதனைகளுக்கு முற்றிலும் முரணாக செயற்பட்டு சமூகங்களுக்கு இடையில் பகைமையை தூண்டிவிடும் நச்சுத்தனமான பிரசாரங்களில் ஈடுபடும் பல பிக்குமார் முற்பிறப்பில் என்னவாக இருந்திருப்பார்கள் என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

## ஜனாதிபதியைச் சந்தித்த பஞ்ஞாகர தேரர்!



கொழும்பு, ஏப்.30

அமைதி நடைபயணத்தின் நிறைவு அரச விழாவினைத் தொடர்ந்து, பஞ்ஞாகர தேரர் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்துக்கு சென்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவைச் சந்தித்தார்.

உலக மக்களுக்கு அமைதிச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கும், பௌத்த மதத்தின் உரிமையை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்வதற்குமாக இலங்கையில் 07 நாட்களாக இந்த நடைபயணம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் இந்த அமைதி நடைபயணத்தை மிகவும் வெற்றிகரமாக நடத்துவதற்கு வழங்கப்பட்ட அரச அனுசரணைக்கு நன்றி தெரிவித்த பஞ்ஞாகர தேரர், இது உண்மையிலேயே ஊக்கமளிக்கும் ஒரு அனுபவம் எனத் தெரிவித்தார்.

இலங்கையையும் உலகையும் இணைக்கும் ஒரு உயிருள்ள தர்மப் பாலமாகச் செயல்படும் அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள “தம்மசேதிய” திட்டத்திற்காக, ஜய சிறீ மஹா போதியின் புனிதமான போதி மரக் கன்றொன்றைப் பரிசளித்தமைக்கும், அமெரிக்காவின் “ஹன் தாவோ” விபஸ்ஸனா தியான மையத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வெசாக் விழாவில் புனிதத் தாதுக்களைக் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கியமைக்கும் அவர் இதன்போது தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், நடைபயணத்தின் போது “ஆலோகா” நாய் மற்றும் ஏனைய விலங்குகள் மீது காட்டப்பட்ட அன்பு, பாதுகாப்பு மற்றும் கருணை என்பவற்றையும் அவர் பாராட்டினார். இந்தத் தாராள மனப்பான்மை, நம் பிக்கை மற்றும் உயரிய உபசரிப்புக்காக மகா சங்கத்தினர், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உள்ளிட்ட ஒட்டுமொத்த இலங்கை மக்கள், பாதுகாப்புப் படையினர், அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கால்நடை மருத்துவக் குழுவினர், மருத்துவக் குழுவினர் மற்றும் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் பஞ்ஞாகர தேரர் நன்றிகளை தெரிவித்தார்.

இந்த அமைதி நடைபயணத்தின் ஊடாக இலங்கையில் ஏற்பட்ட பௌத்த எழுச்சியைத் தொடர்ந்தும் பேணி, இலங்கையை அமைதி மற்றும் மனிதாபிமானத்தின் தீவாக உயர்த்துவதே தமது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதன்போது குறிப்பிட்டார். அத்துடன் உலக அமைதிக்காக பஞ்ஞாகர தேரர் முன்னெடுக்கும் அர்ப்பணிப்புக்காக ஒட்டுமொத்த இலங்கை மக்கள் சார்பாக ஜனாதிபதி தனது நன்றியினைத் தெரிவித்தார். (எ)

## சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து ஷம்மி சில்வா இராஜினாமா

கொழும்பு, ஏப்.30


சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருடன் இணைந்து நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களும் ஒருங்கிணைந்த வகையில் பதவி விலகியுள்ளனர்.

இந்த இராஜினாமா தொடர்பான தகவல், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள இந்த திடீர் மாற்றம், நாட்டின் விளையாட்டு நிர்வாகத்தில் முக்கியமான திருப்பமாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக, இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்காலத் திட்டங்கள், நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் சர்வதேச போட்டித் தயாரிப்புகள் ஆகியவற்றில் இதன் தாக்கம் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த நிலையில், புதிய தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## நாட்டிலிருந்து புறப்பட்டது இந்திய கடற்படை கப்பல்



கொழும்பு, ஏப்.30

இந்திய கடற்படையின் ‘INS NIREEKSHAK’ என்ற கப்பல், பயிற்சித் திட்டத்துக்காக கடந்த 21 ஆம் திகதி நாட்டை வந்தடைந்து, பயிற்சியை நிறைவு செய்த பின்னர் நேற்று முன்தினம் நாட்டிலிருந்து புறப்பட்டது.

இலங்கை கடற்படையினர், கடற்படை மரபுகளுக்கு இணங்க, கொழும்பு துறைமுகத்தில் கப்பலுக்கு பிரியாவிடை அளித்தனர்.

இதன்படி, இந்தியக் கப்பலின் கட்டளை அதிகாரிக்கும், மேற்கு கடற்படை கட்டளையின் தளபதியான ரியர் அட்மிரல் ஜகத் குமாரவுக்கும் இடையே மேற்கு கட்டளை தலைமையகத்தில் ஒரு உத்தியோகபூர்வ சந்திப்பு நடைபெற்றது.

இந்தப் பயிற்சி பயணத்தின்போது இரு நாடுகளின் சுழியோடி துறைகளுக்கு இடையே அனுபவப் பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒரு வாய்ப்பை வழங்கியது.

மேலும், இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே நட்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா நிகழ்ச்சி, கைப்பந்துப் போட்டி மற்றும் கடற்கரை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சி ஆகியவற்றில் இந்தியக் கப்பலின் குழுவினர் பங்கேற்றதோடு, தீவில் உள்ள கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களையும் பார்வையிட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 30 வியாழக்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 17
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்புகிடைக்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களால் டென்ஷன் ஆவீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதரர் வகையில் மனத்தாங்கல் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல்நலத்தில்கவனம்தேவை கவனம்தேவைப்படும்

**விருச்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

**மீனம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# மக்களின் பாதுகாப்பு, கண்ணியத்தை உறுதிப்படுத்துவது அடிப்படை பொறுப்பு



## இலங்கையர் மீது தாக்குதல் அமைச்சர் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.30

இலங்கை நபர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் மனித உரிமைகளை மீறும் அதேவேளை, அண்டை நாடுகளுக்கிடையிலான பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையையும் பாதிக்கும் வகையிலானது என அவர் வலியுறுத்தினார். குறிப்பாக, பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதிப்படுத்துவது எந்த நாட்டுக்கும் அடிப்படைப் பொறுப்பாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, இலங்கை கடற்பரப்புக்குள் அடிக்கடி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகள் குறித்து நீண்டகாலமாகவே இலங்கை மீனவர்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர். பல சந்தர்ப்பங்களில் இலங்கை மீனவர்கள் அமைதியான முறையில் நடந்து கொண்டு, இந்திய மீனவர்களை "தொப்புள் கொடி உறவுகள்" என்ற உணர்வோடு அணுகியுள்ளனர்.

ஆனால், கடந்த காலங்களில் இலங்கை கடல் வளங்கள் பல முறை சூறையாடப்பட்டுள்ளன. சட்டவிரோதமான மீன்பிடி முறைகள் கடல் சூழலுக்கும் மீன் வளங்களுக்கும் தீவிர பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இதனால், உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களுக்கு தீர்வு காணும் நோக்கில், இந்திய உயர் அதிகாரிகளுடனும், மீன்பிடி துறை அதிகாரிகளுடனும் பல கட்டங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தி, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்க இணைந்த நடவடிக்கைகள் அவசியம்.

இத்தகைய சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வகையில் விரைவான மற்றும் நியாயமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். குற்றவாளிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இரு நாடுகளுக்கிடையிலான பிரச்னைகள் அனைத்தும் அமைதியான பேச்சுவார்த்தைகள் மற்றும் பரஸ்பர புரிதலின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# வடக்கு, மத்திய மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, ஏப்.30

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் குருநாகல் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். தென் மாகாணத்தின் சில இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்தின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதேவேளை காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து மணிக்கு 25-35 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும். புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதோடு, அக்கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் கடற்பரப்புகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசுவதுடன், அக்காலப்பகுதியில் கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# 15 இந்திய மீனவர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஏப்.30

இலங்கையில் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இந்திய மீனவர்கள் விடுதலையாகி நேற்றுப் புதன்கிழமை காலை தாயகம் திரும்பினர்.

ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கடல் எல்லையை தாண்டியதாக கூறி, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இவ் வருடத்தின் ஆரம்பத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், இந்திய துணை ஜனாதிபதி சி. பி. இராதாகிருஷ்ணன் கொழும்பில் அமைச்சர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர் மீனவர்களின் விடுதலை உறுதி செய்யப்பட்டது.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் சொந்த ஊர்களை பாதுகாப்பாக சென்றடைய, தமிழக மீன்வளத் துறை போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. (எ)

# 108 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் டச்சுக் கோட்டை புனரமைப்பு

மன்னார், ஏப்.30

மன்னார் மாவட்டத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான மன்னார் டச்சுக் கோட்டையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அதன் புனரமைப்புத் தேவைகள் குறித்து ஆராயும் பொருட்டு, வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கள ஆய்வு மேற்கொண்டனர்.

இதன்போது, கோட்டையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் சிதைவடைந்து வருவதை அவதானித்த அதிகாரிகள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினர்.

கோட்டையின் தொன்மை மாறாமல் பாதுகாப்பதோடு, நவீன சுற்றுலாத் தரத்துக்கு ஏற்ப அதனை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த இவ்வாறான வரலாற்று இடங்களை முறையாகப் பராமரிப்பதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### நிதி அமைச்சின் செயலாளர்

## ஹர்ஷனவின் குடியுரிமை குறித்து முறைப்பாடுகள் எதுவும் இல்லை

கொழும்பு, ஏப்.30

நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவின் குடியுரிமை குறித்து எழுப்பப்படும் சர்ச்சைகள் தொடர்பில் இதுவரை எந்தவொரு உத்தியோகபூர்வ முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"நிதி அமைச்சின் செயலாளர் இரட்டை குடியுரிமை கொண்டவரா என்பது தொடர்பில் இதுவரையில் எங்கும் கூறப்படவுமில்லை, முறைப்பாடளிக்கப்படவுமில்லை. நிதி அமைச்சின் செயலாளரின் குடியுரிமை தொடர்பில் என்னிடம் எந்தத் தகவலும் இல்லை"- என்றார்.

கடந்த சில நாட்களாக நிதி அமைச்சின் செயலாளரின் குடியுரிமை விவகாரம் அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது. குறிப்பாக, இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவரது இல்லத்துக்கு முன்பாக ஒரு குழுவினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, உயர் பதவிகளை வகிப்பவர்களின் குடியுரிமைத் தகைமைகள் வெளிப்படையாக இருக்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியிருந்ததுடன், அரசாங்கத்தின் முக்கிய தீர்மானங்களில் இவ்வாறான பதவிகளில் இருப்பவர்களின் தாக்கம் குறித்தும் கேள்வியெழுப்பியிருந்தனர். (எ)

## அதிக விலைக்கு அரிசி விற்பனை: வர்த்தகருக்கு ரூ. 2 இலட்சம் தண்டம்

கொழும்பு, ஏப்.30

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு சம்பா அரிசியை விற்பனை செய்த கொழும்பு 11 பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு நீதிமன்றம் 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

கொழும்பு 11, ஐந்தாவது குறுக்குத் தெருவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நுகர்வோர் விவகார அதிகார சபையினர் (திடீர் சோதனையை மேற்கொண்ட போது, ஒரு கிலோ கிராம் 240 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்ட சம்பா அரிசி, அங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

குறித்த வர்த்தக நிலையத்தில் 5 கிலோ கிராம் சம்பா அரிசி பொதி 1425 ரூபாய்க்கு அதாவது ஒரு கிலோ அரிசி 285 ரூபாய் வீதம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வர்த்தகர் இதற்கு முன்னரும் இவ்வாறான குற்றங்களுக்காக இரண்டு முறை தண்டிக்கப்பட்டவர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட வர்த்தகருக்கு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ)

## அமைதி நடைபயணக் குழுவினர் இலங்கையிலிருந்து புறப்பட்டனர்

கொழும்பு, ஏப். 30

உலக மக்களுக்கு அமைதிச் செய்தியை பகிர்ந்து கொள்வதற்கும், பௌத்த மதத்தின் உரிமையை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்வதற்குமாக இலங்கையில் 07 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அமைதி நடைபயணத்தை நிறைவு செய்து கொண்டு, வியட்நாம் தேரர் உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

அமெரிக்காவில் வசிக்கும் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த பஞ்ஞாகர தேரர் உள்ளிட்ட பிக்குகள், "அலோகா" நாய் மற்றும் ஏனையோர் நேற்றுக் காலை 07: 12 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து துருக்கியின் இஸ்தான்புல் நகர் நோக்கிப் புறப்பட்டனர். அங்கிருந்து அவர்கள் மற்றுமொரு விமானம் மூலம் அமெரிக்கா செல்லவுள்ளனர்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசேட விருந்தினர் அறையை வந்தடைந்த பிக்குகளுக்கு தானம் வழங்கப்பட்ட பின்னர், விமான நிலையத்தின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்கள் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டனர். (எ)

## மகசின் சிறையில் கைதி உயிரிழப்பு: மேலும் இரு சிறைக்காவலர்கள் கைது

கொழும்பு, ஏப்.30

பொரள்ளை மகசின் சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், மேலும் இரண்டு சிறைக்காவலர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரள்ளை மகசின் சிறைச்சாலை வளாகத்துக்குள் கடந்த திங்கட்கிழமை கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொரள்ளை பொலிஸாரும், கொழும்பு தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரும் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், முதற்கட்டமாக சிறைச்சாலை அதிகாரி மற்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, வரும் மே மாதம் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து, மேலும் இரண்டு சிறைக்காவலர்களை பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக பொரள்ளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தற்போது இந்தச் சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டதுடன் பொரள்ளை பொலிஸார், கொழும்பு தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் இணைந்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தங்கச் சங்கிலிகள் அறுப்பு: பிரதான சந்தேகநபர் ஹெரோயினுடன் கைது

கொழும்பு, ஏப்.30

மேல் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர் தங்கச் சங்கிலி அறுப்புச் சம்பவங்களில் ஈடுபட்ட பிரதான சந்தேக நபர் ஒருவரை, ஹெரோயின் போதைப்பொருளுடன் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் காலை மொறட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உஸ்வத்த வீதியில், கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

சந்தேக நபர் தெஹிவளை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடியமை, மிரிஹான, கடுவலை, ஹோமாகம, கஹத்துடுவை, மொறட்டுவை, வெல்லம்பிட்டிய, நாராஹேன்பிட்டி, கிருலப்பனை, குருந்துவத்தை மற்றும் மோதரை ஆகிய பகுதிகளில் பெண்களின் தங்கச் சங்கிலி அறுப்புச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

விசாரணைகளின் மூலம் சந்தேக நபரால் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கொள்ளையிடப்பட்ட 05 தங்கச் சங்கிலிகள் என்பனவற்றை பொலிஸார் மீட்டனர்.

மேல் மாகாண தெற்கு குற்ற ஒழிப்புப் பிரிவினர் இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உணவு பாதுகாப்பு மிகவும் முக்கியமானது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30

தற்கால உலகில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் விவசாயத்துறையானது பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளது. ஒரு நாட்டின் உணவுப் பாதுகாப்பு என்பது அந்த நாட்டின் ஸ்திரத்தன்மை, இறைமை மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கிய காரணியாகும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பத்தரமுல்லை வொட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"கொரோனா நெருக்கடி காலத்திலோ அல்லது தற்போதைய மத்திய கிழக்கு யுத்த சூழல்களின் போதோ நாடுகளின் உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாவிடின், அந்த நாடுகளின் பொருளாதாரம் சவாலுக்குள்ளாகும். குறிப்பாக, தலைவர்களின் சிறிய தீர்மானங்களினால் கூட விநியோகச் சங்கிலி பாதிக்கப்படக்கூடும்.

அதேபோல், காலநிலை மாற்றங்களினாலும் விவசாயத்துக்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. காலநிலை மற்றும் சுற்றாடல் நிலைமைகளை முன்கூட்டியே எதிர்வு கூறுவது கடினமாகும் போது விவசாயத் துறை பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில், நாட்டின் பொருளாதாரத்தில் விவசாய முயற்சியாளர்களாகிய உங்களது பங்களிப்பு என்பது வெறும் பணம் சம்பாதிப்பது மாத்திரமல்ல, நாட்டின் உணவுப் பாதுகாப்பின் ஊடாகத் தேசியப் பாதுகாப்புக்காக வழங்கப்படும் ஒரு பங்களிப்பாகும். உங்களது திறமைகளை வெளிப்படுத்துவது உங்களுக்கு மாத்திரமன்றி நாட்டு மக்களுக்கும் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது"- என்றார். (எ)

# பாதாள உலக கும்பலின் துப்பாக்கிதாரி கைது

## ரூ. 50 கோடி போதைப்பொருள் வலையமைப்பும் அம்பலம்!

கொழும்பு, ஏப்.30

வெளிநாட்டில் மறைந்து வாழும் பாதாள உலகக் கும்பல் தலைவரான "ஹோமாகம ககன" என்பவரின் துப்பாக்கிதாரியாகச் செயல்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேல் மாகாண வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் ஹோமாகம, பிட்டிபன பகுதியில் வைத்து இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஆஸ்திரியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு துப்பாக்கி, ஒரு மகஸின் மற்றும் 05 தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் எம்பிலிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான கொடித்துவக்கு கங்கானம்கே லசந்த எனப்படும் "அஞ்சு" என அடையாளம் காணப்பட்டார்.

இவர் ஹோமாகம, பிட்டிபன பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளார். ஹோமாகம, பாதுக்க, ஹன்வெல்ல, மீகொட, கொஸ்கம மற்றும் நவகமுவ ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

டுபாயில் பொலிஸ் காவலில் இருப்பதாகக் கூறப்படும் பாதாள உலகக் கும்பல் தலைவரான "கொண்ட ரஞ்சித்" என்பவரின் போதைப்பொருள் வலையமைப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கிடைத்த தகவல்களுக்கு அமையவே இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வலையமைப்பின் மூலம் இதுவரை ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், சந்தை பெறுமதி சுமார் 50 கோடி ரூபாய்க்கும் அதிகமான ஹெரோயின் உள்ளிட்ட 37 கிலோகிராம் போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

# மின்சாரக் கட்டணங்கள் குறித்து மே மாதம் 9 ஆம் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஏப்.30

திருத்தப்பட்ட மின்சாரக் கட்டணங்கள் குறித்த தீர்மானம் எதிர்வரும் மே மாதம் 09 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, 2026 ஆம் ஆண்டுக்கான விசேட மின்சாரக் கட்டணத் திருத்த யோசனை தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ)

# 40 நாடுகளுக்கு இலவச விசா

கொழும்பு, ஏப்.30

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் அதிகரிக்கும் நோக்கில், எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதி முதல் 40 நாடுகளுக்கு "இலவச விசா" வசதியை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற "சுற்றுலாச் செயலணிக் கூட்டத்தில்" இது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

யால உள்ளிட்ட 19 வனவிலங்கு சரணாலயங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக வனஜீவராசிகள் திணைக்களம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. தற்போதுள்ள மலசலகூடங்களின் பராமரிப்புப் பணிகள் தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், புதிய மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் இது மிக முக்கியமானதொரு விடயம் என்பது இங்கு வலியுறுத்தப்பட்டது. (எ)

### சாரதிக்கு உடல்நலக்குறைவு:

# கட்டுப்பாட்டை இழந்த பஸ் திடீரென வீட்டுக்குள் புகுந்தது

கொழும்பு, ஏப்.30

மொறட்டுவையிலிருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றின் சாரதிக்கு திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக, பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறு பக்கத்துக்கு சென்றதுடன் அங்கிருந்த வீடொன்றின் மீது மோதி நின்றது.

இந்த விபத்தில் பஸ்ஸில் இருந்த எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை. இருப்பினும், வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பஸ் மோதியதில், அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறட்டுவை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மே தினப் பேரணியில் பங்கேற்க போவதில்லை

## ஐ. ம. சவுக்கு ஐ. தே. க. பதில்

கொழும்பு, ஏப்.30

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்துள்ள மே தினப் பேரணியில் ஐக்கிய தேசிய கட்சி பங்கேற்காது என்று அறிவித்துள்ளது. மே முதலாம் திகதி பௌர்ணமி போயா தினம் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏப்ரல் 27 ஆம் திகதியிட்ட உங்களது கடிதம் கிடைக்கப்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதே பலருடைய எதிர்பார்ப்பாக உள்ளது. அந்த மக்கள் விருப்பத்துக்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். எனினும், இந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதி பௌர்ணமி போயா தினமாக அமைந்துள்ளதால், அன்றைய தினம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அதனை மத நிகழ்வுகளுக்காக ஒதுக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பிரதமராக இருந்த காலத்திலேயே, மே முதலாம் திகதி பௌர்ணமி தினமாக அமையும் பட்சத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பொருத்தமற்றது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன் காரணமாக, ஐக்கிய மக்கள் சக்தியின் அல்லது வேறு எந்தக் கட்சியும் ஏற்பாடு செய்யும் மே தினப் பேரணிகளில் எம்மால் பங்கேற்க முடியாதுள்ளது. எவ்வாறாயினும், எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து பணியாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதை மீண்டும் நினைவுறுத்துவதுடன், உங்களது அனைத்து நல்ல நடவடிக்கைகளும் வெற்றிகரமாக அமையப் பிரார்த்திக்கிறேன்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# மன்னாரில் உள்ள மதுபானசாலைகளில் பகல் நேரத்தில் கள் விற்பனைக்கு தடை

மன்னார், ஏப்.30

மன்னார் மதுபானசாலைகளில் பகல் நேரத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட உள்ளூர் கள் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் மன்னார் நகர சபையில் நேற்று முன்தினம் மதுவரித் திணைக்கள அதிகாரிகள், மன்னார் பொது சுகாதார மருத்துவ அதிகாரி, கள் உற்பத்தியாளர்கள் மற்றும் மதுபானசாலை உரிமையாளர்களுக்கிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

மன்னார் நகர சபை தவிசாளர் டானியல் வசந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், உள்ளூர் கள் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் சந்தைப்படுத்தல் சவால்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை முறையாக விற்பனை செய்ய முடியாமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் போது, போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளை மதுபானசாலைகளில் விற்பனை செய்வதை 5 மாதங்களுக்கு நிறுத்தி தருமாறு உள்ளூர் கள் உற்பத்தியாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த கோரிக்கை தொடர்பில் பல்வேறு வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இருப்பினும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மதுபான விற்பனையாளர்களின் சம்மதத்துடன் விற்பனை நேரக்கட்டுப்பாடு தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி மன்னார் நகர் பகுதியில் உள்ள மதுபானசாலைகளில் தினமும் காலை 10: 00 மணி முதல் பிற்பகல் 02: 00 மணி வரை போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் கள் விற்பனையை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# சிவனொளிபாத மலைக்கு விரைவில் கேபிள் கார் திட்டம்

கொழும்பு, ஏப்.30

சிவனொளிபாத மலை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய பல முக்கிய இடங்களில் கேபிள் கார் திட்டங்களை ஆரம்பிப்பது குறித்து அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்தின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற "சுற்றுலாச் செயலணிக் கூட்டத்தில்" இது தொடர்பான தீர்மானங்கள் எட்டப்பட்டன.

சிவனொளிபாத மலையை மையப்படுத்தி கேபிள் கார் திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு நீண்டகாலமாகப் பல்வேறு தரப்பினர் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஈழத்தமிழர்...

உள்வாங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வு ஆவணத்தைத் தயாரிப்பது பற்றி ஒரு வருடத்துக்கு முன்பிருந்தே நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இந்த முயற்சியில் ஆரம்பத்திலிருந்தே பங்கெடுக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அந்தத் தொடர் கலந்துரையாடல்களின் முடிவிலேயே தற்போது 28 பேர் அடங்கிய வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியிலிருந்து நாம் ஒருபோதும் விலகப் போவதில்லை.

இனப்பிரச்சனைத் தீர்வுக்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரத் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை எடுத்து வரும் முயற்சிகளைப் புதிய குழுவின் செயற்பாடு பாதிக்காது என்று அவர் வலியுறுத்தினார்.

சட்டத்தரணிகள் பேரவையின் ஆவணத் தயாரிப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை, இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் இந்தக் கூட்டு முயற்சியில் பங்களிக்க விரும்பினால், அவர்களுக்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் என்றும் அவர் இதன்போது அழைப்பு விடுத்தார்.

இனப்பிரச்சனைக்கான தமிழர் தரப்பின் கூட்டு நிலைப்பாட்டைத் தயாரிப்பதில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## கோப்பாபிலவு...

முன்னெடுக்கவுள்ள போராட்டம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டனர். (அ)

## குற்றவியல்...

சமூகத்தை பயமுறுத்தும் வகையில் தன்னிடம் உள்ள துப்பாக்கியை பயன்படுத்துகிறார் என நீதிமன்றிலும் சுட்டிக்காட்டி அர்ச்சுனாவின் விளக்கமறியலை நீடிக்குமாறு மன்றிடம் கோரினேன்.

ஆனால் இளவாலை பொலிஸார் விளக்கமறியலை நீடிக்கவேண்டிய தேவையில்லை எனவும், தமது விசாரணைகளை முடிவடைந்து விட்டன எனவும் கூறினார். அதனால் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

ஆனாலும் அவரது கைத்துப்பாக்கி சான்றுபொருளாக மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கைத்துப்பாக்கி அனுமதி தொடர்பில் மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

அதனை தொடர்ந்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதிக்கு மன்று திகதியிட்டுள்ளது-என்றார். (அ)

## செம்மணி மனித...

ரனீத்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் நாள் பணிகள் நேற்று புதன்கிழமை நடைபெற்றன.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய அகழ்வுப் பணிகளின்போது ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட இரு என்பு கூட்டுத் தொகுதிகளின் பகுதியளவான என்பு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வுப் பணிகளின்போது ஒரு என்புத் தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை சுத்தம் செய்த பின்னரே எத்தனை என்புக்கூடு என்பதனை உறுதியாக கூற முடியும்.

அகழ்வுப் பணிகள் 1.5 அடி தொடக்கம் 2 அடி ஆழத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இந்த ஆழத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொண்டு என்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

இன்றைய அகழ்வுப் பணிகளின்போது ஓர் இடத்தில் சந்தேகத்திற்கு உரிய முறையில் கரிய நிற மண் காணப்பட்டது. அதனால், அதனை அரித்தட்டு மூலம் அரித்து எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் இன்றைய அகழ்வுப் பணிகளின் போது சிறிய வலை போன்ற பொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## மன்னார்...

காலை மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இக்கூட்டத்துக்கு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வேகம் திருப்தியளிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டினார். "குறிப்பாக வீதி அபிவிருத்திப் பணிகள் எதிர்பார்த்தவாறு நடைபெறவில்லை. தேசியப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் உரிய காலத்தில் செலவு செய்யப்படவில்லை. திறைசேரியால் போதுமான நிதி விடுவிக்கப்பட்டாலும், திட்டங்களை உரிய காலத்தில் நிறைவு செய்யாமல் அதிகாரிகளால் வெறுமனே காரணங்கள் மட்டுமே கூறப்படுகின்றன.

நான் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருக்கின்றேன். மன்னார் மாவட்டத்தில் தான் 2024ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வர முன்னர் இருந்த நிலையிலேயே சில அதிகாரிகள் தொடர்ந்தும் செயற்படுகின்றனர். அவர்கள் பழைய அரசியல்வாதிகளுடன் தொடர்புகளைப் பேணிக் கொண்டு, இங்கு நாம் கூறுபவற்றுக்குத் தலையாட்டிவிட்டு, பின்னர் அந்தப் பழைய அரசியல்வாதிகளுடன் இணைந்து மக்களின் அபிவிருத்திப் பணிகளைச் செய்ய மறுக்கின்றனர். அந்தத் தொடர்புகளை உடனடியாகத் துண்டியுங்கள். இங்கு என்ன நடக்கின்றது என்பதை நாம் அறியாமல் இல்லை" என அதிகாரிகளுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கான புதிய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன்போது, சுற்றுலா மேம்பாடு, விளையாட்டு மைதானங்கள் புனரமைப்பு, பிரஜா சக்தி செயற்திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு, இறங்குதுறை எல்லை நிர்ணயம், எல்லை மீன் நிர்ணயம், "சார்ப்" திட்டத்தின் கீழான குளப் புனரமைப்பு, போக்குவரத்து அமைச்சின் வேலைத்திட்டங்கள் மற்றும் பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியனவற்றுக்கான அனுமதிகள் தொடர்பில் விரிவாக விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

மேலும், மன்னாரில் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் குறித்தும், கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னைய தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன்னேற்றம் தொடர்பில் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், கூராய்க்குளம் விவகாரம் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மணல் அகழ்வு தொடர்பில் விசேட கூட்டமொன்று நடத்தப்பட்ட பின்னரும், அது தொடர்பான பிரச்சனைகள் தொடர்வதாக உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

நேரமின்மை காரணமாக நேற்றைய கூட்டத்தில் சில விடயங்கள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், இந்த மணல் பிரச்சனை உள்ளிட்ட ஏனைய முக்கிய விடயங்களை ஆராய்வதற்காக அடுத்த மாதமே விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமொன்றை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், து.ரவிகரன், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), மாகாணத் திணைக்களப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், மத்திய திணைக்களங்களின் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

## அர்ச்சுனா எம்.பி...

பிணக்கு ஒன்று நிலவி வரும் நிலையில் , கடந்த 25ஆம் திகதி குறித்த காணிக்குள் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மற்றைய தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் தனது கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டியமை தொடர்பிலான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது.

அதனை அடுத்து, கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டிய சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் அளிக்க அர்ச்சுனா இராமநாதனை அழைத்து, வாக்குமூலங்களை பதிவு செய்த பின்னர் அவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை அர்ச்சுனாவை நேற்று புதன்கிழமை வரையில் விளக்கமறியல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து அர்ச்சுனா இராமநாதனை 05 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் , 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசு பிணையிலும் செல்ல அனுமதித்த மன்று, எதிர் தரப்பினருடன் எவ்வித பேச்சுவார்த்தைகளுக்கும் போகக்கூடாது என நிபந்தனையும் விதித்துள்ளது.

அதேவேளை , அர்ச்சுனா இராமநாதன் மீது தாக்குதல் மேற்கொண்டார் என குற்றம் சாட்டப்பட்ட பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை நேற்றைய தினம் புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அதன் அடிப்படையில் நேற்று அவரும் மன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் , பெண்ணையும் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (அ)

## திறைசேரி...

அமைச்சர் ருவன் ரணசிங்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே ஒரு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

அதில் சர்வதேச நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

இந்தப் பணத்தை மீட்க முடியும் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

இருப்பினும், அரசாங்கத்தால் இந்தப் பணத்தை மீட்க முடியாவிட்டால், சம்பந்தப்பட்ட அனைத்து திறைசேரி அதிகாரிகளும் அத்தொகையைச் செலுத்த நேரிடும் என சுற்றுலா பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## பல பகுதிகளில்...

முன்னெச்சரிக்கை மையத்தினால் இன்றைய தினத்திற்காக இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## திறைசேரி...

எக்ஸ் பதிவின் ஊடாக அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் அரசியலமைப்பின் படி பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திடமே உள்ளது. கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்க ளைக் கண்காணிக்கும் நேரடிப் பொறுப்பு நிதிப் பற்றிய குழுவுக்கு உண்டு.

எனவே, திறைசேரி செயலாளர், குழு முன்னிலையில் பிரசன்னமாவது அவரது விருப்பம் சார்ந்த விடயமல்ல, அது ஒரு அரசியலமைப்பு ரீதியான கடமையாகும்.

தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தால், அதனைச் சரி செய்ய அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஆனால் அவர் ஏன் ஓடுகிறார்? மறைப்பதற்கு என்ன இருக்கிறது?

ஜே.வி.பி மற்றும் என்.பி.பி அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினராகவும், இந்தக் குழுவின் உறுப்பினராகவும் இருந்துவிட்டு, இப்போது இந்த பதவியை வகிக்கும் முதலாவது அரசியல்வாதி என்ற ரீதியில் அவருக்குப் கூடுதல் பொறுப்பு இருக்கிறது.

பாராளுமன்றத்தின் கண்காணிப்பு மற்றும் சமநிலைத் தன்மையை மதிக்காத இந்த செயற்பாடு, மக்கள் எதிர்பார்த்த "முறைமை மாற்றத்திற்கு" இழைக்கப்பட்ட துரோகமாகும். சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்ட நல்லாட்சி தொடர்பான வாக்குறுதிகளை மீறும் செயலாகவும் இது அமைந்துள்ளது.

அடுத்த வாரம் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்ற உள்ளதால், அதன் பின்னர் சமுகமளிக்கலாம் என திறைசேரிச் செயலாளர் கூறியுள்ள காரணத்தை ஏற்க முடியாது.

அது தற்போதைய பிரச்சனைக்குத் தொடர்பற்றது.

திறைசேரி செயலாளர் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறினால், அதனைச் செய்யக்கூடிய ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும்-என்றுள்ளது. (அ)

## அரச நிதி பற்றிய...

முன்னதாக திறைசேரியின் செயலாளர் இன்று அரச நிதிப் பற்றிய குழுவில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஹர்ச டி சில்வா தெரிவித்திருந்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை திறைசேரியினால் செலுத்தப்பட்ட கடன் தொகையில் 2.5 மில்லியன் அமெரிக்க டொலரை சைபர் குற்றவாளிகள் ஊடுருவி தமது வங்கிக் கணக்குகளுக்கு மாற்றியுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகி பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளன.

இந்நிலையில் அது தொடர்பான விசாரணைகளுக்காக முன்னிலையாகுமாறு, நிதியமைச்சின் செயலாளர் ஹர்சன சூரியப்பெருமவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# பெண் செயற்பாட்டாளர்களுக்கு வடக்கு-கிழக்கில் அச்சுறுத்தல்கள்

## மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 30

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைப் போராளிகள் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுவதாகவும், அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் உடனடி கவனம் செலுத்துமாறு வலியுறுத்தி, பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு ஆணைக்குழு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணிப் பிணக்குகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரப் போராட்டங்கள் குறித்துப் பணியாற்றும் பெண் ஆர்வலர்கள், பாதுகாப்புப் பிரிவினரால் பல்வேறு தடைகளை எதிர்கொள்வதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த 2025 ஆம் ஆண்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் தலையீடுகள் மற்றும் தேவையற்ற குறுக்கீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாக ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

சிந்தனைச் சுதந்திரம், மதச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் போன்ற அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இதன் மூலம் மீறப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள், பெண் உரிமைப் போராளிகளை மோசமாக நடத்துவதைத் தவிர்க்க வேண்டும் எனவும், அவர்களுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அந்த கடிதத்தின் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை மீனவர் மீது தாக்குதல் விசாரணை ஆரம்பித்தது கடற்படை

கொழும்பு, ஏப். 30

இந்தியக் கடற்றொழிலாளர்களால் இலங்கை மீனவர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் இதனை தெரிவித்தார்.

அதற்கமைய, அவர்கள் கடற்றொழிலாளர்களா அல்லது கடற்கொள்ளையர்களா என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், குறித்த நபர்கள் எந்த நோக்கத்துக்காக இந்திய கடல் எல்லைக்குள் சென்றுள்ளனர் என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# 21 மாவட்டங்களில் மே தின கூட்டம் நடத்துகின்றது தேசிய மக்கள் சக்தி!

## நுவரெலியா செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 30

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தி , 21 மாவட்டங்களில் 21 மேதினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா மேற்படி தகவலை வெளியிட்டார்.

"மக்கள் ஆட்சிக்கு பலம்" எனும் தொனிப்பொருளின்கீழ் தேசிய மக்கள் சக்தியின் மே தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பில் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறியவை வருமாறு-

கொழும்பில் இம்முறை பிரதான மேதின கூட்டம், பேரணியை பிரமாண்டமாக நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தோம். எனினும், எரிபொருள் நெருக்கடி நிலை உள்ளிட்ட காரணங்களைக் கருதி மாவட்ட ரீதியாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் பங்கேற்புடன் நுவரெலியாவில் மேதினக் கூட்டமொன்று நடத்தப்படும். நுவரெலியா கூட்டத்தில் பதுளையில் உள்ள மக்களும் பங்கேற்பார்கள்.

நுவரெலியாவில் நடைபெறும் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்பார். கொழும்பு கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்துகொள்வார்.

யாழ்ப்பாணத்திலும் மே தினக் கூட்டமொன்று நடத்தப்படும். கிளிநொச்சி மாவட்ட மக்கள் இதில் பங்கேற்பார்கள்.

வன்னியை மையப்படுத்தி வவுனியாவில் மே தினக் கூட்டம் நடைபெறும். முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மக்கள் இதில் இணைவார்கள்.

இலங்கையின் மே தின வரலாற்றில் கட்சியொன்று 21 மாவட்டங்களில் கூட்டம், பேரணி நடத்துவது இதுவே முதன்முறையாகும். இதில் பெருந்திரளான மக்கள் நிச்சயம் பங்கேற்பார்கள்-என்றார். (அ)

# வீதியில் கிடந்த தங்க நகையை உரியவரிடம் சேர்த்த இளைஞன்!

## யாழில் நெகிழ்ச்சி சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணத்தில் வீதியில் விழுந்து கிடந்த தங்க நகையை எடுத்துச் சுன்னாகம் பொலிஸார் மூலம் உரியவரிடம் சேர்த்த இளைஞனின் நேர்மையான செயல் சமூகத்தில் பாராட்டைப் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சுன்னாகம் பகுதியில் உள்ள வர்த்தக வங்கிக்கு முன்பாக தங்க ஆபரணம் ஒன்று கீழே விழுந்து காணப்பட்டுள்ளது.

அதனை குப்பிளான் பகுதியைச் சேர்ந்த செல்வராசா பார்த்தீபன் என்பவர் கண்டெடுத்து, உடனடியாக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

இதனைத் தொடர்ந்து, சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிதர்சன் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தி, அந்த நகையின் உரிமையாளரான ஏழாலை பகுதியைச் சேர்ந்த முதியவரை கண்டுபிடித்தனர்.

பின்னர், அந்த முதியவரை அழைத்து, பார்த்தீபனின் கையாலேயே தங்க நகை உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வீதியில் கிடைத்த நகையை நேர்மையுடன் திருப்பி வழங்கிய பார்த்தீபனின் செயலை பலரும் பாராட்டி வருகின்றனர். (அ)

# போதைக்குப் பணம் கொடுக்காத தாயின் கால்களை முறித்த மகன்!

கொழும்பு, ஏப். 30

போதைப்பொருள் வாங்குவதற்குப் பணம் கொடுக்காதமையால் பெற்ற தாயின் கால்களைத் தடியால் அடித்து முறித்த மகனின் செயல் பொதுமக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேகாலை - தேவலகம பகுதியில் இக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் போதைப்பொருள் வாங்குவதற்காகத் தனது தாயிடம் 5,000 ரூபா கேட்டுள்ளார்.

தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று தாய் கூறியதால் ஆத்திரமடைந்த இளைஞன், அருகில் கிடந்த தடியால் தாயின் இரு கால்களையும் சரமாரியாகத் தாக்கியுள்ளார். இந்த தாக்குதலில் 46 வயதான அந்தப் பெண்ணின் இரு கால்களும் முறிந்துள்ளன.

வலியால் துடித்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு, கேகாலை பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அவரது இரு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது அவர் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

பெற்ற தாய் என்றும் பாராமல் இந்த மிலேச்சத்தனமான செயலைச் செய்த அந்த இளைஞன், சம்பவ இடத்திலிருந்து தப்பியோடித் தலைமறைவாகியுள்ளார்.

இது குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், தலைமறைவாகியுள்ள சந்தேக நபரைப் பிடிக்க தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கு முன்னரும் அந்த இளைஞன், நண்பர்களுடன் போதைப்பொருள் நுகர்வதற்காக தன் தாயிடம் பணம் கேட்டு வந்துள்ளார். மகனின் அச்சுறுத்தல் காரணமாக சில சமயங்களில் தாய் பணம் கொடுத்து வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# ரயில் பாதை திட்டங்கள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார ஆராய்வு

கொழும்பு, ஏப். 30

கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் ரயில்வே சேவையை புதிய வடிவில் முன்னெடுப்பது மற்றும் அதற்கான திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்றுது.

இந்த சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு புறநகர் ரயில்வே திட்டம் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் களனிவெளி ரயில் பாதையில் மருதானையிலிருந்து மாகும்புர, பிரதான ரயில் பாதையில் கொழும்பு கோட்டையிலிருந்து ராகமை, கரையோர ரயில் பாதையில் கொழும்பு கோட்டையிலிருந்து பாணந்துறை முதலாவது கட்டமாகச் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் என்பன குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது மற்றும் திட்ட அமுலாக்கத்தின்போது எதிர்நோக்கக்கூடிய சவால்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் ஆராயப்பட்டது. தற்போதுள்ள ரயில் சேவைக்கு இணையாக மின்சார ரயில் சேவைகளை முன்னெடுப்பதுடன், தற்போதுள்ள அகலப் பாதைகளுக்கு பதிலாக நியமப் பாதைகளாக ரயில் தண்டவாளங்களை புனரமைப்பது உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை

கொழும்பு, ஏப். 29

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்யவும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கவும் நாட்டுக்கு வருகை தந்திருந்த உலக சுகாதார ஸ்தாபணத்தின் சர்வதேச நிபுணர் குழுவினர், தமது பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

அதற்கமைய இந்த மீளாய்வு அறிக்கையின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, நாட்டின் சுகாதார சேவை வலையமைப்பை அதிக வினைத்திறனுள்ள மற்றும் மக்கள் மையப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்தியர் ராஜேஷ் சம்பாஜிராவ் பாண்டவ் தலைமையிலான நிபுணர் குழுவினர், அண்மையில் சுகாதார அமைச்சில் வைத்து அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரைச் சந்தித்து தமது மீளாய்வு முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்தனர். இதன்போது இலங்கையின் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புச் சேவையின் தற்போதைய நிலை மற்றும் சவால்கள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

ஆரம்ப சுகாதார சேவை மறுசீரமைப்பு தொடர்பான இறுதி அறிக்கை இன்னும் சில தினங்களில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை "அனைவருக்கும் சுகாதாரக் காப்பீடு" எனும் இலக்கை அடைவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளைத் தொடர்ச்சியாக வழங்கப்போவதாக உலக சுகாதார ஸ்தாபனம் இதன்போது மீள உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org